உலகைத்திருத்துவது பேனா — மக்கள் உள்ளத்தை உயர்த்துவதும் பேனா — நலத்தை வளர்ப்பதுவும் பேனா
இந்த நாட்டினை யாளுவதும் பேனா.

# எழுத்தாளர் வட்டச் சிறப்பு மாநாடு, சென்னை, தமிழ்நாடு

# The Writers' Circle Special Conference, Madras, Tamilnadu.

## ஒரு விசேஷ வேண்டுகோள்

16 FEB 1960

45

To

Dr K. S. Krishnan, F.R.S.,
New Delhi

சென்னை.
31—1—61

பெருந்தகையீர்,

வணக்கம்.

இருபாலும் நலனோங்குக.

நாளது 1961 மார்ச் 11ந் தேதி (சார்வரி மாசி 28) சனிக்கிழமை மாலை 4-மணிக்கு சென்னை இராயப்பேட்டை வெஸ்ட்காட் பெருஞ்சாலை 'உட்லண்ஸ் பூங்காவில்' அமைக்கப்படவிருக்கும் '**தமிழ்தாதா மகா மகோபாத்யாய டாக்டர் உ. வே. சாமிநாதய்யர் அரங்கத்தில்**' எழுத்தாளர் **வட்டச் சிறப்பு மாநாடு**' வெகு விமரிசையாக நடைபெற ஏற்பாடுகள் செய்யப்பட்டு வருகின்றன. மாநாடு தொடர்ந்து ஞாயிறு 12—3—61 தேதியும் நடைபெறும்.

நம் தாய்நாட்டு **மணிக்கொடியை** பிரபல நூலாசிரியரும், வழக்கறிஞரும், முன்னாள் சென்னை மேயருமான உயர்திரு **ம. இராதாகிருஷ்ண பிள்ளை** B.A., B.L., அவர்கள் **ஏற்றுவிப்பார்கள்.**

மாநாட்டை சென்னை சர்வகலாசாலை உப-அத்யக்ஷகர் **Dr. Sir A. லக்ஷ்மணஸ்வாமி முதலியார்,** D.Lit., D.SC., LL.D., D.C.L., M.L.C., அவர்கள் **துவக்கிவைக்க** சம்மதித்துள்ளார்கள்.

மாநாட்டுக்கு மே. த. மஹரிஷி கவியோகி தவத்திரு **ஸ்ரீ சுத்தானந்த பாரதியார்** அவர்கள் தலைமை தாங்க இசைந்தருளியுள்ளார்கள்.

மாநாட்டில் பல எழுத்தாளர்களும், புலவர்களும், கவிஞர்களும், பேராசிரியர்களும், ஆசிரியர்களும், பிரமுகர்களும் கலந்துகொள்கிறார்கள். பத்திரிகை ஆசிரியர், பேராசிரியர், எழுத்தாளர் பலர் சொற்பொழிவுகள் நிகழ்த்துகிறார்கள். தமிழ்நாட்டின் பல பாகங்களிலிருந்து பிரதிநிதிகள் வருகிறார்கள்.

மாநாடு கூடும் வேளையில் "**சிறந்த நூல்கள் - சஞ்சிகைகள் - பத்திரிகைகள் கண்காட்சி**" ஒன்று நிறுவ ஏற்பாடுகள் செய்துவருகிறோம். இக்காட்சியில் நூல்கள், சஞ்சிகைகள், பத்திரிகைகள் வைக்க விரும்பும் நண்பர்கள் 8—3—1961க்குள் கீழ்க்கண்ட முகவரிக்கு நேரிலோ, தபாலிலோ, ரயில்பார்சலிலோ (தமது சொந்தச்செலவிலும், பொறுப்பிலும்) அனுப்பி, காட்சிக்குப் பிறகு, திருப்பி எடுத்துச்செல்ல வேண்டும். இதற்கு தனிக்கட்டணம் நூலாசிரியர்களும், பதிப்பாளர்களும் காட்சிக்குச் செலுத்தவேண்டியதில்லை. ஆனால், அவர்கள் வரவேற்புக்குழுவில் அங்கத்தினராகச் சேரவேண்டும்.

மாநாட்டில் பேசவிரும்புகிறவர்கள், தீர்மானம் கொண்டுவர பிரியப்படுகிறவர்கள் 8—3—1961க்குள் கீழ் முகவரிக்கு முன்னதாக தெரிவிக்கவேண்டுகிறோம். தீர்மானத்தின் நகலும் முன்னதாக அனுப்பிவைத்தலவசியம்.

திருக்குறள் இசைவிருந்து, தமிழ் இசை, விகடக்கச்சேரி, பரதநாட்டியம், படக்காட்சிகள் முதலிய பல வைபவங்கள் நடைபெறும்.

மாநாட்டில் ஒரு '**புலவர் மன்றம்**'' நிறுவப்படுகிறது. பரிசீலனைக்குழு தலைசிறந்த புலவர்களையும், கவிஞர்களையும், பேராசிரியர்களையும், எழுத்தாளர்களையும், கல்விப்பணியில் ஈடுபட்ட பிரமுகர்கள் பலரையும், சிறந்த பொதுஜன ஊழியர்களையும், மற்றும் பல **தினசரிகளையும், வார ஏடுகளையும், திங்கள்தாள்களையும்** வரவேற்று பாராட்டுப் பத்திரம் தந்து, அறிமுகத்தாள் அளித்து, பதக்கம் சூட்டி, பொன்னாடைப் போர்த்தி கௌரவிக்க முடிவுசெய்திருக்கிறது. பலருக்கு எழுத்தாளர் கருவியாகிய 'பேனா' 'அன்பளிப்பு' அளிக்கப்படும். எழுத்தாளர் சரிதையில் இம்மாதிரி நடப்பது முதல்தடவை எனக்கூறத் தேவையில்லை.

**எழுத்தாளர் வட்டத்தின்** கொள்கைகளை எல்லோரும் ஒருமனதாக வரவேற்பார்களென்பதில் ஐயமில்லை.

**ஜாதி, மதம், கட்சி, நிறம், மொழி, மாகாணம், தேசம், அரசியல்** போன்ற வேறுபாட்டுணர்ச்சிகளில் 'எழுத்தாளர்கள்' சிக்காமலிருக்க மாநாடு ஆலோசனை கூறும். எல்லா மொழிகளும் **வாழ, வளர,** பரவ வேண்டுமென்பது எழுத்தாளர் வட்டத்தின் சிறந்த கொள்கையாகும்.

## கொள்கைகள்

"எழுத்தாளர்கள் உயிரோடிருக்கும்போதே, அவர்களையும், அவர்கள் நூல்களையும் வரவேற்று, ஆதரித்து, உதவி செய்வது; அவர்கள் நூல்களை வெளியிட வசதிசெய்வது; பிறமொழிகளில் அன்னார் நூல்களைப் பிரசுரிக்கத் திட்டம் வகுப்பது; எழுத்தாளர்களுக்குப் போதிய பண வசதி கிடைக்கும்பொருட்டு ஒரு '**எழுத்தாளர் கூட்டுறவு நிதித்திட்டம்**' வகுப்பது; எழுத்தாளர்களின் கட்டுரை, கதை, கவிதைகளுக்குக் காலதேச வர்த்தமானம் அனுசரித்து அதிக '**சன்மானம்**' அளிக்க எல்லா பத்திரிகை உரிமையாளர்களுக்கு யோசனை தருவது; எழுத்தாளர்களுக்கு ஓய்வுக்கால ஊதியவசதி (பென்ஷன்) கிடைக்க வழிசெய்வது; அன்னார் வேலைகளுக்குப் பாதுகாப்புத் தேடித் தருவது; மேல் நாடுகளுக்குத் தூதுக்குழுக்கள் பல அனுப்பப்படும்பொழுது, எழுத்தாளர்களையும் சேர்க்க வழிசெய்வது; எழுத்தாளர் பெயர், வரலாறு விபரபட்டியலை (எவர்எவர்?) அனைத்து இந்திய ரீதியில் தொகுத்து வெளியிடுவது; வேலையில்லாமல், வருமானம் இல்லாமல் அல்லல்படும் எழுத்தாளர்களுக்கு உதவி அளிப்பது; எழுத்தாளர்களுக்குத் தேவையான சர்வதேச தகவல்களைத் திரட்டித்தருவது; எழுத்தாளர்களுக்குள் இருக்கும் வேற்றுமை உணர்ச்சிகளை மாற்று

வது; மொழி வேற்றுமையை அகற்ற வழி செய்வது; தினசரிகள், வார ஏடுகள், திங்கள் தாள்கள் விற்கும் பத்திரிக்கை ஏஜண்டுகள், பத்திரிகை நிருபர்கள் குறைகளைக் கவனித்து, அவர்களுக்கு அதிக வசதிகள் கிடைக்க வழிசெய்வது; பத்திரிகை ஏஜண்டுகளுக்கு அன்னுர் ஏஜன்ஸிக்குப் பாதுகாப்புத் தேடித்தருவது; பத்திரிகை ஏஜண்டுகளுக்கு அதிக '**கமிஷன்**' கிடைக்க ஏற்பாடு செய்வது......'' முதலியன மகாநாட்டின் முக்ய கொள்கைகளாகும்.

சில பத்திரிகை வாசகர்கள், நேயர்கள், சந்தாதாரர்கள் முதலியோர் சில பத்திரிகைகள், சஞ்சிகைகளைப்பற்றி 'புகார்' செய்திருப்பதை மாநாடு கேட்டு, விவாதித்து, முடிவுசெய்து நட்பு முறையில் பரிகாரம் தேடித்தரும். அச்சம், தயை, தாட்சண்யமின்றி முடிவுகூறும்.

நாட்டில் பல எழுத்தாளர் சங்கங்கள் இருந்துவருகின்றன. பல மாநாடுகள் கூட்டப் பட்டிருக்கலாம். 'இந்த எழுத்தாளர் வட்டச் சிறப்பு மாநாடு' கொள்கைகளை, வேலைகளை, சேவைகளை எல்லோரும் ஒரு மனதாக வரவேற்பது கண்டு களிப்புறுகிறோம். பெருமையும் அடைகிறோம்.

மாநாட்டுக்குப் பிறகு நாடெங்கும் எழுத்தாளர் வட்டத்தின் ஆதரவில் தீர்மானங்களை ஒட்டி பல கூட்டங்கள் கூட்டப்படும்.

எழுத்தாளர்கள் விழிப்புற, ஐக்யப்பட, முன்னேற, எழுச்சியுற மாநாடு வழி காட்டும். எனவே, சரித்திரச்சிறப்பு வாய்ந்த இந்த மாநாடு நன்றாக நடைபெற எல்லா நண்பர்களின் நல் லாசிகளையும், பேராதரவையும், ஒத்துழைப்பையும், உதவியையும் பெரிதும் விரும்புகிறோம்.

மாநாட்டுக்கு அளிக்கும் உதவிகளை அன்புடன், வந்தனத்துடன், நன்றியுடன் ஏற்றுக் கொள்வோம். 'நன்கொடை' டிக்கட்டுகள் போட்டிருக்கிறோம். உங்களை நேரில் வந்து பார்த்து ஆதரவு திரட்ட விருப்பம். ஆனால், மாநாடு வேலைகள் அதிகமாயிருப்பதாலும், அவகாசம் இல் லாததாலும், அனாவசியச் செலவுகளைத் தவிர்க்கவும் வேண்டி நாங்கள் வரமுடியவில்லை. எனவே, இந்த வேண்டுகோளை விடுவித்திருக்கிறோம்.

அச்சிட்ட அழைப்பும், நிகழ்ச்சிநிரலும், தேநீர்விருந்து, விருந்து இசைவிருந்து முதலிய வற்றிற்கு அனுமதிச் சீட்டும் விரைவில் அனுப்பிவைப்போம். தாங்கள் மாநாட்டுக்கு வருகை தந்து சிறப்பிக்க வேண்டுகிறோம். '**எழுத்தாளர் வட்ட மாநாட்டு மலர்**' (Writers' Circle Conference Souvenir) ஒன்று (¼ crown அளவு சுமார் 100 ஆர்ட் பக்கங்கள் ஆர்ட் அட்டை இருவர்ணங்களில்) கண்களை-கருத்தைக்கவரும் முறையில் தயாரிக்கப்படுகிறது. இந்த மலரில் பிரபல எழுத்தாளர் கள், புலவர்கள், கவிஞர்கள், ஆசிரியர்கள் முதலியோர் கட்டுரைகள் எழுதியுள்ளார்கள். பாரத தேசத்தின் பலபாகங்களிலிருந்து ஆசிச்செய்திகள் மலருக்குக் கிடைத்திருப்பது குறிப்பிடத் தக்கது. '**எழுத்தாளர் மாநாட்டு மலருக்கு**' தாங்கள் ஒரு விசேஷச்செய்தி (Special Message) அனுப்ப வேண்டுகிறோம். '**கட்டுரை**' ஒன்று சௌகரியப்பட்டால் எழுதியும் அனுப்பலாம். 28-2-61குள் எங்களுக்குக் கிடைத்தால் உதவியாக இருக்கும்.

எல்லா நன்கொடைகளும் (Cheque) 'செக்' மூலம் கீழ் முகவரிக்கு அனுப்பவேண்டும். 'செக்'குகள் '**THE WRITERS' CIRCLE**', **MADRAS** என்ற பெயருக்கு எழுதப்படவேண்டும்.

தங்கள் பேராதரவை, ஒத்துழைப்பை, உதவியை பெரிதும் விரும்புகிறோம். தங்கள் பதிலை எதிர்பார்க்கிறோம். எழுத்தாளர் பிரச்னையில் தங்களுக்கு அனுதாபம் இருக்குமென்பதில் ஐயமில்லை. வந்தனம்.

இங்ஙனம்,
தங்கள் விஸ்வாசமுள்ள,
S. Lacshmi Narasimhan

**தலைவர் : எழுத்தாளர் வட்டம் :—**
**'வித்யா பிரகாசா', 'ஞானபாஸ்கர'**
**K. S. இராமஸ்வாமி சாஸ்திரி, B.A., B.L.**
**நீதிபதி (Retd.)**

**தலைவர் : வரவேற்புக் குழு ;—**
**S. லட்சுமிநரசிம்மன்,**
**செய்தி ஆசிரியர் : சுதேசமித்திரன்,**
**சென்னை,**

---

**எல்லா கடிதங்கள், கட்டுரைகள், ஆசிச்செய்திகள், நன்கொடை, 'செக்' குகள் or M.O. கள் யாவும் கீழ் முகவரிக்கு அனுப்பிவைக்க வேண்டும் :—**

To ஸ்ரீ S. லட்சுமிநரசிம்மன், செய்தி ஆசிரியர், "சுதேசமித்திரன்,"
தலைவர்: வரவேற்புக்குழு: எழுத்தாளர் வட்டச் சிறப்பு மாநாடு,
23, பண்டாலா வேணுகோபால் நாயுடு தெரு, சென்னை-5.

மாநாட்டுக்கும், புலவர் மன்றத்துக்கும், நூல் காட்சிக்கும், இசைவிருந்துகளுக்கும் கீழ்கண்ட முறையில் '**நன்கொடை**' ஏற்றுக்கொள்ளப்படும்.

## நன்கொடை விபரம்.

| | | | | |
|---|---|---|---|---|
| ரூ. | 5000/- | அளிப்பவர் | — | 'விசேஷ போஷகர்' |
| ,, | 2500/- | உதவினால் | — | 'போஷகர்' |
| ,, | 1000/- | கொடுப்பவர் | — | 'விசேஷ நன்கொடையாளர்' |
| ,, | 500/- | தருபவர் | — | 'நன்கொடையாளர்' |
| ,, | 250/- | தந்தால் | — | 'ஆதரவாளர்' |
| ,, | 100/- | கொடுத்தால் | — | 'நண்பர்' |
| ,, | 50/- | அளித்தால் | — | 'உதவியாளர்' |
| ,, | 25/- | கொடுப்பவர் | — | 'அங்கத்தினர்' |

**(சிறு நன்கொடைகளும் ஏற்றுக்கொள்ளப்படும்)**

(தனியே ரூ. 10/- அளித்து வரவேற்புக்குழுவில் சேரவேண்டுகிறோம்.)